**செ. கு. எண்: 202** **நாள் : 26.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.12.2015

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், தியாகராயபுரம் பகுதியைச் சேர்ந்த திரு. முகமது ஜாபர் என்பவரின் மகன் இம்ரான், 6.12.2015 அன்று திருவொற்றியூர் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தானாக முன் வந்து உதவிய நிலையில், விஷ பூச்சி கடித்ததால் உடல்நிலை பாதிப்படைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 12.12.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்த நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. இம்ரான் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**